2015 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடுகள்) அமர்ந்து கொண்டு என்னுடைய அனுமதி இல்லாமல் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேள்வி நேரத்தில் எழுந்திருந்து உங்கள் சௌகரியத்திற்குப் பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) இல்லை, அவைக் குறிப்பைப் பார்த்துச் சொல்கிறேன். நீங்கள் ஒரு point raise பண்ணியிருக்கிறீர்கள். நான் அவைக் குறிப்பைப் பார்த்து முடிவு எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான் முடிவெடுக்கிறேன் என்று சொல்லிவிட்டேன். நீங்கள் ஒன்று கேட்டிருக்கிறீர்கள். நான் அவைக் குறிப்பைப் பார்த்து முடிவு எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. நான் அவைக் குறிப்பைப் பார்த்துதான் முடிவு எடுப்பேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி, பல்லவாடா பகுதியிலே உயர் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைப்பதற்காக ரூபாய் 115 கோடியிலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்போதைய திராவிட முன்னேற்றக் கழக அரசு அதற்கு நிலம் ஒதுக்கீடு செய்ய முன்வராததால் அந்தத் திட்டம் ஈரோடு மாவட்டத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. தற்போது மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, தங்களுடைய கோரிக்கை உரிய முறையிலே ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 பிப்ரவரி 18

12—

வீட்டுமனைப் பட்டா

***34625—திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள கோபாலிபுரம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11-20

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி மேல் வெற்றி பெற்று, எப்போதும் எவராலும் பெற முடியாத மாபெரும் வெற்றிகளை எல்லாம் தனி மனித இராணுவமாய் கழகத்திற்குப் பெற்றுத் தந்து, கழக வெற்றி வரலாற்றிற்கு உயிர் கொடுத்திட்ட எங்கள் உயிரினும் மேலான தலைவி, தெய்வீகத் தலைவி, தமிழினம் காத்து நிற்கும் தமிழர் குலசாமி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், மதுரை மேற்கு உள்வட்டம், மாடக்குளம் வருவாய்க் கிராமம், உட்கடை, கோபாலிபுரம் பகுதியில் வசித்துவரும் நபர்களில் 20 குடும்பங்களுக்கு ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. வீட்டுமனையிடம் இல்லாத நபர்களுக்கு தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இலவச வீட்டுமனைப் பட்டா கேட்டு, தொடர்ந்து கோரிக்கையை*

முன்வைக்கிறார்கள். மதுரை மாநகராட்சியில் உள்ள 75-வது வட்டத்தில், கோபாலிபுரம் பகுதியில் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக 300-க்கு மேற்பட்ட தலித் குடும்பங்கள் குடியிருந்து வருகின்றன. அந்தப் பகுதியில் இலவச வீட்டுமனைப் பட்டா வேண்டும் எனத் தொடர்ச்சியாக வலியுறுத்தி, பல முறை மாவட்ட நிருவாகத்திடம் மனு வழங்கியிருக்கின்றனர். ஆகவே, அங்கே 300-க்கு மேற்பட்ட குடும்பங்கள் இருக்கக்கூடிய காரணத்தினால், அனைவருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவது, கருணையின் பிறப்பிடம் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறுகிற இப்புனித அரசினுடைய நிலையான கொள்கையாகும். ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கு வீட்டுமனைகளை, தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்து, வருவாய்த் துறை மக்களுக்கு உதவி செய்து வருகிறது.

மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டில் வேறு எங்கும் இதுவரை காணாத வகையில், அன்னைத் தமிழகத்தில் மட்டும்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடு நடைபெறுகிற இப்புனித அரசில் வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதுடன், 2011-2012 ஆம் நிதியாண்டில் ஒரு இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதாக இலக்கு நிர்ணயித்து, இலக்கையும் கடந்து, 1,21,804 2012-2013 ஆம் நிதியாண்டில் ஒரு இலட்சம் என இலக்கு நிர்ணயித்து, இலக்கையும் கடந்து 31,299, 2013-2014 ஆம் நிதியாண்டில் 2 இலட்சம் என இலக்கு நிர்ணயித்து, 2,17,723, இந்த நிதியாண்டிலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு 3 இலட்சம் நிர்ணயித்து, 3,15,411 ஆக இந்த நான்கு ஆண்டுகளிலே 7 இலட்சம் இலக்காக நிர்ணயித்து, 7,72,367 மக்களுக்கு வீட்டுமனைப்

பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மதுரையைப் பொறுத்தஅளவிலே, 2013-2014 ஆம் ஆண்டிலே 9004 பேர்களுக்கும், 2012-2013 ஆம் ஆண்டிலே 6,464 பேர்களுக்கும், 2011-2012-லே 3,266 பேர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகிற இப்புனித அரசு வீட்டுமனைப் பட்டாக்களை இதுவரையிலே வழங்கி இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கொள்கை, தகுதியுள்ள அனைத்து நபர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்பதுதான். இந்தத் தமிழ் மண்ணிலே தங்களுக்கும் சொந்த இடம் இருக்கிறது என்கின்ற சாதனை சரித்திரம் படைத்திருக்கிற ஒரே தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை தெற்கு தொகுதி, 57-வது வார்டில், டாக்டர் அம்பேத்கர் காலனி, அனுப்பானடி பகுதியிலே 250 குடும்பங்களும், 71-வது வார்டு, கீழ்மதுரை காலனியில் 110 குடும்பங்களும் உள்ளன. இந்த இரண்டு பகுதிகளும் தலித் மக்கள் வாழக்கூடிய பகுதிகளாகும். இந்தப் பகுதிகளில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கலாம் என மாவட்ட நிருவாகம் மாநில அரசின் சம்பந்தப்பட்ட துறைக்குக் கடிதம் எழுதி இருக்கிறது. அதில் விரைந்து நடவடிக்கை எடுத்து, இந்த இரண்டு பகுதிகளுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தமிழ்நாட்டில் 20 இலட்சம் பேர் இலவச வீட்டுமனைப் பட்டா கோரி மனு கொடுத்திருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். எனவே, அனைத்து மனுக்களையும் பரிசிலனை செய்து, உரிய காலத்தில இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தி, அது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய வ. நம்புகின்றேன்.